திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

தலைவர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதி ஊர்வலம்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்!

திருவண்ணாமலை, ஆக. 6- திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறுகிறது. அமைதி ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

தந்தை பெரியார் எண்ணங்களை செயல்படுத்திய செயல் வீரர், பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாக பெற்று ஏழையின் சிரிப்பில் இறைவனை கண்டவர், தமிழன்னைக்கு செம்மொழி மகுடம் சூட்டிய தவப்புதல்வர், திராவிட இனத்தின் எழுச்சி தலைவர், நவீன தமிழகத்தின் சிற்பி, உலக தமிழினத்தின் விடி வெள்ளி, எளிய மக்களின் நல்வாழ்வுகாக தன் வாழ்நாள் எல்லாம் இறுதி வரை களமாடிய இணையற்ற களப்போராளி, உடன் பிறப்பே எனும் ஒற்றை சொல்லால் இலட்சிய படையினை கட்டியெழுப்பிய திராவிடத்தை தலைவர். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

07.06.2024 புதன்கிழமை காலை சரியாக 8.00 மணிக்கு, காந்தி சிலை அருகில் இருந்து அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது. அமைதி ஊர்வலத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையேற்று, தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைதி ஊர்வலத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜய லட்சுமி ரமேஷ், ஜெயராணிரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன்,

மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதி ராமஜெயம், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ்.டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை.சீனுவாசன், பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல்பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத்தி வாகரன், இராணிவேங்கடேசன்,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை, டி.கே.மோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு 3வது சிலை திறப்பு விழா!

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, ஆக. 6- கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மிக சிறப்பாக திருச்சி தெற்கு மாவட்டத்தில் வருடம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இதன் அடிப்படையில் இதுவரை கலைஞர் 100 என்ற தலைப்பில் 100 நிகழ்ச்சிகள் முடிக்கப்பட்டு 101வது நிகழ்வாக சட்டமன்ற தொகுதிக்கு ஒரு சிலை என்ற அடிப்படையில் இதுவரை இரண்டு சட்டமன்ற தொகுதியில் சிலை திறக்கப்பட்டு தற்போது திருவெறும்பூர் தொகுதியில் மூன்றாவது திருஉருவ சிலை 07.08.2024 புதன்கிழமை காலை 08.30 மணிக்கு திருவெறும்பூர் காட்டூர் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நுற்றரண்டு திருவுருவ சிலையை காணொளி காட்சி வாயிலாக கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள் .விழாவுக்கு கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையிலும் எனது தலைமையிலும் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட ,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர் கழக சேர்மன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் அமைதிப் பேரணி - திரளாகப் பங்கேற்பீர்!

திருவுருவ படத்திற்கு மாலை அணிவிப்பு! மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிக்கை!

தருமபுரி, ஆக. 6 - தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் தன் கண் இமை மூடும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அய்யா அவர்களின் 6வது நினைவுநாளில் புகழ ஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்படி, தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்தும் மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

அதன்படி, ஆகஸ்டு 7ம் தேதி புதன்கிழமை காலை 9.00 மணியளவில் தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து அமைதி பேரணியாக சென்று நான்கு ரோடு அண்ணா சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அவர்கள் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது அதன் பின் மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் கலைஞர் அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுவதோடு, அனைத்து பகுதிகளிலும் ஆதரவற்ற முதியோர் இல்லங்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தியும், தலைவர் கலைஞரின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ம் ஆண்டு நினைவு நாள்

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழகத்தினர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்வீர்!

மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கிருஷ்ணகிரி, ஆக. 6- கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில்

தமிழ் மொழியை செம்மொழியாக்கி தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பாதுகாப்பு அரணாக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு 13 முறை வெற்றியை கண்டு ஐந்து முறை 20 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்தார்

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தை பெற்றிருந்த முத்தமிழர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாள் 07.08.24 புதன்கிழமை அன்று மாவட்ட அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட உள்ளது இதனை அடுத்து மாவட்ட மாநகர ,ஒன்றிய , பேரூர் , பகுதி , வார்டு ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆங்காங்கே கலைஞர் அவர்களின் திரு உருவப்படத்தை நிறுவி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஆக. 6 - புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும். ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கவைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், நாளை (07.08.2024 - புதன் கிழமை) புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திலுள்ள ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, வட்டம், மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள , ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள். முன்னாள். இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். முன்னாள். இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

விழுப்புரம் வடக்கு மாவட்டம் கழகம் சார்பில் அமைதி பேரணி!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் - மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் வேண்டுகோள்!

செஞ்சி ஆக. 6- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அமைதி பேரணி நடைபெறுகிறது இதில் மாவட்ட கழகத்தினர் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் கலைஞர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாஅவர்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளை மனதிலும், தோளிலும், தமது வாழ்நாள் முழுவதும் சுமந்து சமுதாயத்திற்கும் மனித நேயத்திற்கும் சமூக நீதிக்கும் பல்வேறுநலிந்தவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்கும்வாழும் வள்ளுவனாக, சமத்துவபெரியாராக வாழ்ந்து காட்டியவர்முத்தமிழ் அறிஞர் கலைஞர்இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு அவர் விட்டுச் சென்றபணிகளை தொடர்ந்து செயல்படுத்த அடித்தளம் அமைத்துக் கொடுத்த செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவுநாள் நாளை 7ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டம்திமுக சார்பில் திண்டிவனம் இந்திரா காந்தி பழைய பேருந்து நிலையத்திலிருந்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகதிமுக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் மௌன ஊர்வலமாக சென்று திண்டிவனம் பழைய நகராட்சி அலுவலகம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் கலைஞரின் திருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துக்கின்றனர்.

மேலும் செஞ்சி ஒன்றியத்தில் 60 ஊராட்சிகளிலும், மேல்மலையனூர் ஒன்றியத்தில் 55 ஊராட்சிகளிலும், வல்லம் ஒன்றியத்தில் 66 ஊராட்சிகளிலும் ,ஒலக்கூர் ஒன்றியத்தில் 52 ஊராட்சிகளிலும், மயிலம் ஒன்றியத்தில் 47 ஊராட்சிகளிலும் ,மரக்காணம் ஒன்றியத்தில் 56 ஊராட்சிகளிலும், திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும், செஞ்சி பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் ,அனந்தபுரம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் ,மரக்காணம் பேரூராட்சியில் 18 வார்டுகள் என மொத்தம் 336 ஊராட்சிகள் 84வார்டுகள்உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்தமாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக செயல் வீரர்களும்அமைதி ஊர்வலமாக சென்று தமிழின தலைவர் டாக்டர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவிமலர் மரியதை செலுத்த வேண்டும் என அமைச்சர் செஞ்சி மஸ்தான்,மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

முத்தமிழறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்!

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஆக. 6- தந்தை பெரியாருக்கு பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால் இந்த தமிழ்ச் சமுதாயம் நாதியற்று போய் இருக்கும். தலைவர் கலைஞர் அவர்களால் தான் தமிழினம் தலை நிமிர்ந்தது. இன்று நம் உயிர் நிகர் தலைவர், தமிழக முதல்வர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தலைவர் கலைஞர் வழியில் உலகம் போற்றும் வகையில் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் வருகின்ற 07.08.2024 புதன்கிழமை அன்று திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து வார்டுகளிலும், கிளைக் கழகங்களிலும் காலை 08.00 மணிக்கு கலைஞர் அவர்களின் திருவுறுவப் படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமெனவும். அதனைத் தொடர்ந்து, காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிலை முன்பு அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர், ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்வதோடு பொதுமக்களையும் அதிக அளவில் பங்குகொள்ள செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு புகழஞ்சலி!

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், ஆக. 6 - மண்ணிமைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவார்களின் ஆறாம் ஆண்டு நினவு தினத்தில் திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உத்தம தலைவருக்கு அனைவரும் ஒன்றிணைந்து புகழஞ்சலி செலுத்துவோம் என மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தமது அறிக்கையில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் குறிப்பிட்டுள்ளதாவது,

“உலகமெல்லாம் வாழுகின்ற தமிழர்களின் ஒப்பற்ற தலைவராய் தமிழுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் வாழுகின்ற நாள் வரை போராளியாக போராடி, உலக அரங்கில் தமிழ்நாட்டையும், தமிழினத்தையும் தலை நிமிர செய்த ஒப்பாறும் மிக்காரும் இல்லா தலைவர் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதல்வரும் திராவிட நாயகருமான தளபதி அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற இருக்கின்ற அமைதிப் பேரணியில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக பங்கேற்று, எதையும் தாங்கும் இதயம் கொண்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் அருகில் ஓய்வு கொள்ளும் ஓயாத உழைப்பாளி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்திடுவோம்.

தங்கத் தலைவர் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் அவர்களின் சொந்த மாவட்டமாம் திருவாரூரில் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளைமுன்னிட்டு, 07.08.2024 புதன் அன்று அந்தந்த ஒன்றிய, நகர ,பேரூர் மற்றும் கிளைக் கழக ,வார்டு கழகங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் விதமாக, கழக கொடி ஏற்றியும், தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மண்ணின் மைந்தருக்கு பெருமை சேர்ப்பதோடு, மறைந்தும் நம் மனங்களில் மறையாமல் வாழும் தலைவர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மனிமகுடம் சூட்டிட வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.